# வெற்றிக்கு வழி அமைப்போம்

# பயிற்சிப் பயிலரங்கம்

# பத்தாம் வகுப்பு தமிழ்



த. ரேவதி
கராட்சி உயர்நிலைப்பள்ளி,
இராஜகோபாலபுரம்,
புதுக்கோட்டை.

# வினாத்தாள் வடிவமைப்பு

| வினா எண் | கேட்பவை | மதிப்பெண்கள் | காலம் |
| --- | --- | --- | --- |
| | ஒரு மதிப்பெண் வினாக்கள் | | |
| 1 – 15 | 15 | 15 × 1 = 15 | 10 நி |
| | இரு மதிப்பெண் வினாக்கள் | | |
| 16 – 21 | 6 | 4 × 2 = 8 | 15 நி |
| 22 – 28 | 7 | 5 × 2 = 10 | 15 நி |
| | மூன்று மதிப்பெண் வினாக்கள் | | |
| 29 – 31 | 3 | 2 × 3 = 6 | 20 நி |
| 32 – 34 | 3 | 2 × 3 = 6 | 20 நி |
| 35 – 37 | 3 | 2 × 3 = 6 | 20 நி |
| | ஐந்து மதிப்பெண் வினாக்கள் | | |
| 38 – 42 | 8 | 5 × 5 = 25 | 40 நி |
| | எட்டு மதிப்பெண் வினாக்கள் | | |
| 43 – 45 | 6 | 3 × 8 = 24 | 30 நி |
| **மொத்தம்** | | **100** | **170நி (2. 50)** |
| | | **சரிபார்த்தல்** | **10 நி** |

# ஒரு மதிப்பெண் வினாக்கள்

1 – 11 - சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

12 – 15 - செய்யுள் பாடல் - ஒரு மதிப்பெண் வினாக்கள்

- 45 Gj;jfg;gapw;rp tpdhf;fs;

புதிய வினாக்களுக்கு கீழ்க்கண்டவற்றில் கவனம் செலுத்தவும்

- ,yf;fzf; Fwpg;G
- nrhy;Yk; nghUSk;
- Nkw;Nfhs;fs;
- E}y; ngah;
- Mrphpah; ngah;
- vJif> Nkhid

# இரு மதிப்பெண் வினாக்கள்

**gpupT – 1 (4(6) tpdhf;fs; vOj Ntz;Lk;)**

16 – 21 – பாடப்பகுதியின் குறுவினாக்கள்

கட்டாய வினாக்கள் – திருக்குறள்
விடைக்கேற்ற வினா
எழுதுக

**gpupT – 2 (5(7) tpdhf;fs; vOj Ntz;Lk;)**

22 – 28 – மொழித்திறன் வினாக்கள்

# மூன்று மதிப்பெண் வினாக்கள்

(வினா எண் 29 – 37)

- உரைநடை – 2 (gpupT – 1)

  கட்டாயம் இடம் பெறுபவை – உரைப்பத்தி வினா

- செய்யுள் – 2 (gpupT – 2)

  கட்டாயம் இடம் பெறுபவை – மனப்பாடப் பாடல்

- இலக்கணம் – 2 (gpupT – 3)

  கட்டாயம் இடம் பெறுபவை – அலகிடுதல் - அணி

# 2 & 3 மதிப்பெண் வினாக்களுக்கு கவனம் செலுத்த வேண்டியவை

- 61 புத்தக குறுவினா, சிறுவினா (செ & உ- 36 ; இ-25)
- திருக்குறள் & மனப்பாடப் பாடல்
- உரைபத்தி, விடைக்கேற்ற வினா
- அலகிடுதல் – அணி
- மொழிபயிற்சி வினாக்கள்

# ஐந்து மதிப்பெண் வினாக்கள்

- செய்யுள் வினா – 1
- கடிதம் – 1
- காட்சிக்குக் கவினுற எழுதுதல் – 1
- படிவம் நிரப்புதல் – 1
- மொழிபெயர்ப்பு – 1

(அல்லது)

நிற்க அதற்குத் தக – 1

# எட்டு மதிப்பெண் வினாக்கள்

| | |
|---|---|
| **வினா 43** | • உரைநடை - 1 |
| **வினா 44** | • விரிவானம் - 1 |
| **வினா 45** | • பொதுக்கட்டுரை – 1 (குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுதல்) |

# கடிதம் எழுதுதல்

கடிதம்

- உறவுமுறைக் கடிதம்
- அலுவலகக் கடிதம்

# கடிதம் படிநிலைகள்
## அலுவலகக் கடிதம்

- அனுப்புநர்
- பெறுநர்
- விளி
- பொருள்
- கடிதப் பொருளடக்கம்
- முடித்தல்
- இப்படிக்கு
- இடம், நாள்
- உறைமேல் முகவரி

# கடிதம் படிநிலைகள்
## உறவுமுறைக் கடிதம்

- இடம், நாள்
- விளி
- கடிதப் பொருளடக்கம்
- இப்படிக்கு
- உறைமேல் முகவரி

# கட்டுரை வினாக்களை இப்படி எதிர்கொள்ளலாமே!

- குறிப்புச் சட்டகம்
- தலைப்புகளைத் தெளிவாக எழுதுதல்
- மேற்கோள் காட்டுதல்
- பத்திகளைச் சரியாகப் பிரித்தல்
- பிழைகளின்றி எழுதுதல்
- முன்னுரையுடன் தொடங்கி முடிவுரையுடன் முடித்தல்

# இவ்வளவுதான் உங்கள் பாடப் புத்தகத்தில்!

| இயல் | இருப்பது |
| --- | --- |
| 1 | கட்டுரை – சான்றோர் வளர்த்த தமிழ் |
| 2 | கடிதம் – மரம் இயற்கையின் வரம் – நண்பனுக்கு வாழ்த்து மடல் |
| 3 | கடிதம் – உணவு விடுதியில் தரமற்ற உணவு – உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு |
| 4 | கட்டுரை – விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் |

# இவ்வளவுதான் உங்கள் பாடப் புத்தகத்தில்!

| இயல் | இருப்பது |
|---|---|
| 5 | நூல் மதிப்புரை - பள்ளி ஆண்டுவிழாவிற்காக ஒப்புதல் கடிதம் - பள்ளியை தூய்மையாக வைத்திருத்தல் |
| 6 | அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வு |
| 7 | கடிதம் - உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் – நாளிதழ் ஆசிரியருக்கு |
| 8 | கடிதம் – தெரு மின்விளக்குகள் பழுதடைதல் – மின்வாரிய அலுவலருக்கு |
| 9 | வாழ்த்துரை – நாட்டு நலப்பணித்திட்ட நிகழ்வு<br>நன்றியுரை – பசுமை பாதுகாப்புப் படை நிகழ்வு |

# விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கலாமா?!

- மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பம் (இயல் – 9)
- நூலக உறுப்பினர் விண்ணப்பம் (இயல்-5)
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் விண்ணப்பம்
- பணியில் சேருவதற்கான தன் விவரப் பட்டியல் நிரப்புதல்

# அனைத்து பாடங்களிலும் பொதுவாக படிக்க வேண்டியவை

- பலவுள் தெரிக, குறுவினா, சிறுவினா, நெடுவினா
- கற்பவை கற்றபின்
- மொழிபெயர்ப்பு
- கலைச்சொல்
- காட்சியைக் கவிதையாக்குக / தொடராக்குக
- நிற்க அதற்குத் தக
- நயம் பாராட்டுக (இயல் – 1, 3, 4 & 8)

# மொழியோடு விளையாடு!
# இயல் - 1

- சந்தக் கவிதையில் வந்த பிழைகள்

  எ.கா - தேணிலே ஊரிய செந்தமிழின்

- வினைமுற்றை வினையாலணையும் பெயராக்குக.

  எ.கா - நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.

- ஒரே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்துதல்.
- சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.
- குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர் அமைத்தல்.
- தமிழெண்கள்

# மொழியோடு விளையாடு!

## இயல் - 2

- சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.

  எ.கா - இன்சொல் - பண்புத்தொகை

  இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு.

- நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக.

# மொழியோடு விளையாடு!
## இயல் - 3

- பழமொழிகளை நிறைவு செய்க.

  எ.கா. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே

- இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

  எ.கா. சிலை – சீலை

- கதையைத் தொடர்க.

# மொழியோடு விளையாடு!
## இயல் - 4

- வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.
- பத்தியைப் படித்துப் பதில் தருக.
- தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.
- குறிப்பைப் பயன்படுத்தி எதிர்மறையாக மாற்றுக.

  எ.கா - மீளாத் துயர் – மீளும் துயர்
- இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

# மொழியோடு விளையாடு!
## இயல் - 5

- தொடர்களில் விடுபட்டதை எழுதுக.
- தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.

  எ.கா – கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

  அழகிய குளிர்ந்த கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.
- தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.

  எ.கா – பசுமையான ____ஐக்______ கண்ணுக்கு நல்லது.

  (காணுதல், காட்சி)
- எழுவாய்த் தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், விளித் தொடர் மற்றும் வேற்றுமைத் தொடர்

  - அட்டவணை

# மொழியோடு விளையாடு!
## இயல் - 6

- தொடர்களை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

எ.கா – தனிச்சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக

- பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக மாற்றி எழுதுக.
- நாட்டுப்புறப் பாடலுக்கேற்ற சூழலை எழுதுக.
- நயவுரையைத் தொடர்க.

வண்டுகளை ஈர்க்கும் வாசனையில்
பூக்களிடம் வசப்படுவது மனிதர்களே!

- தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.

மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.

# மொழியோடு விளையாடு!

## இயல் - 7

- பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.

  எ.கா - வரப்போகிறேன்

  இன்னும் சிறிது நேரத்தில் வரப் போகிறேன்.

- தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.

  எ.கா - ஐந்திணை – 5 – ரு

- கவிதையை உரையாடலாக மாற்றுக.
- ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

  எ.கா - தஞ்சாவூர் - தஞ்சை

# மொழியோடு விளையாடு!
# இயல் - 8

- மரபுத்  தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
- பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.
- நயம் பாராட்டுக.
- சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக.

  கானடை – கான் அடை – காட்டைச் சேர்

  கான் நடை – காட்டுக்கு நடத்தல்

  கால் நடை – காலால் நடத்தல்

# மொழியோடு விளையாடு!

## இயல் - 9

- உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.
- பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.
- பாடலில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.
- விளம்பரத்தை நாளிதழுக்கான செய்தியாக மாற்றியமைக்க.
- கீழ்க்காணும் நாள்காட்டியில் புதன் கிழமையை ஒன்றாம் தேதியாகக் கொண்டு தமிழெண்களால் நிரப்புக.

# இலக்கணம் இனிதே! அணி

| அணி | எடுத்துக்காட்டு |
| --- | --- |
| தற்குறிப் பேற்ற அணி | போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி வாரல் என்பனபோல் மறித்துக்கை காட்ட |
| தீவக அணி | சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்<br>ஏந்து தடந்தோள், இழிகுருதி- பாய்ந்து |
| நிரல்நிறை அணி | அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை<br>பண்பும் பயனும் அது |
| தன்மை அணி | மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்<br>கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் – வையைக்கோன்<br>கண்டளவே தோற்றான் அக்காரிகைதன் சொற்செவியில்<br>உண்டளவே தோற்றான் உயிர். |

# இலக்கணம் இனிதே!
# அலகிடுதல்

**கருவியும் காலமும் செய்கையும் செய்யும் [MAY – 2022]**
**அருவினையும் மாண்ட தமைச்சு - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| கரு / வியும் | நிரை நிரை | கருவிளம் |
| கா / லமும் | நேர் நிரை | கூவிளம் |
| செய்/கை/யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| செய் / யும் | நேர் நேர் | தேமா |
| அரு/வினை/யும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| மாண் / ட | நேர் நேர் | தேமா |
| தமைச்சு | நிரைபு | பிறப்பு |

இக்குறட்பா **'பிறப்பு'** என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

# இலக்கணம் இனிதே!
# எழுத்து, சொல்

- எழுத்து
  - முதலெழுத்து
  - சார்பெழுத்து
    - உயிரளபெடை
      - செய்யுளிசை அளபெடை
      - இன்னிசை அளபெடை
      - சொல்லிசை அளபெடை

# இலக்கணம் இனிதே!
# எழுத்து, சொல்

## சொல் – மூவகை மொழி

- தனி மொழி

கண், படி

- தொடர் மொழி

கண்ணன் வந்தான்

- பொது மொழி

வேங்கை

# இலக்கணம் இனிதே! எழுத்து, சொல்

- தொழிற்பெயர்

| விகுதி பெற்ற தொழிற்பெயர்கள் | நட + தல் = நடத்தல் |
|---|---|
| எதிர்மறைத் தொழிற்பெயர் | நடவாமை |
| முதனிலைத் தொழிற்பெயர் | தட்டு, உரை |
| முதனிலை திரிந்த தொழிற்பெயர் | கெடு - கேடு |

- வினையாலணையும் பெயர்

# இலக்கணம் இனிதே! தொகைநிலைத் தொடர்கள்

- வேற்றுமைத் தொகை
- உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை
- வினைத்தொகை
- பண்புத்தொகை
- இருபெயரொட்டுப் பண்புத்தொகை
- உவமைத்தொகை
- உம்மைத்தொகை
- அன்மொழித்தொகை

# இலக்கணம் இனிதே!
# தொகாநிலைத் தொடர்கள்

- எழுவாய்த் தொடர்
- விளித் தொடர்
- வினைமுற்றுத் தொடர்
- பெயரெச்சத் தொடர்
- வினையெச்சத் தொடர்
- வேற்றுமைத் தொடர்
- இடைச்சொல் தொடர்
- உரிச்சொல் தொடர்
- அடுக்குத் தொடர்

# இலக்கணம் இனிதே!
# வழு, வழா மற்றும் வழுவமைதி

| வழு மற்றும் வழா நிலை | வழுவமைதி |
|---|---|
| திணை | திணை |
| பால் | பால் |
| இடம் | இடம் |
| காலம் | காலம் |
| வினா | மரபு |
| விடை | |
| மரபு | |

# இலக்கணம் இனிதே!
# வினா, விடை வகைகள்

| வினா வகை | விடை வகை |
|---|---|
| அறிவினா | சுட்டுவிடை |
| அறியா வினா | மறை விடை |
| ஐய வினா | நேர் விடை |
| கொளல் வினா | ஏவல் விடை |
| கொடை வினா | வினா எதிர் வினாதல் விடை |
| ஏவல் வினா | உற்றது உரைத்தல் விடை |
| | உறுவது கூறல் விடை |
| | இனமொழி விடை |

# இலக்கணம் இனிதே! பொருள்கோள்

- ஆற்றுநீர்ப் பொருள்கோள்
- நிரல்நிறைப் பொருள்கோள்
  1. முறை நிரல்நிறைப் பொருள்கோள்
  2. எதில் நிரல்நிறைப் பொருள்கோள்
- கொண்டுகூட்டுப் பொருள்கோள்

# இலக்கணம் இனிதே! பா – வகை, அலகிடுதல்

# இலக்கணம் இனிதே! அகப்பொருள்

| திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | குளிர்காலம், முன்பனிக்காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறு பெரும்பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | ஆறு பெரும்பொழுதுகள் | எற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

# இலக்கணம் இனிதே!
# அகப்பொருள்

| கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவர்,குறத்தியர் | தோன்றல், ஆயர், ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| உணவு | மலைநெல், தினை | வரகு, சாமை | செந்நெல், வெண்ணெல் | மீன், உப்புக்குப் பெற்ற பொருள் | சூறையாடலால் வரும் பொருள் |
| விலங்கு | புலி, கரடி, சிங்கம் | முயல், மான், புலி | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை |
| பூ | குறிஞ்சி, காந்தள் | முல்லை, தோன்றி | செங்கழுநீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| மரம் | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இலுப்பை, பாலை |
| பறவை | கிளி, மயில் | காட்டுக்கோழி, மயில் | நாரை, நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| நீர் | அருவிநீர், சுனைநீர் | காட்டாறு | மனைக்கிணறு, பொய்கை | மணற்கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறு கோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன் கோட்பறை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப்பண் | முல்லைப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல், களை பறித்தல் | மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் | வழிப்பறி, நிரை கவர்தல் |
| உரிப்பொருள் | ஐவகை நிலங்களுக்கும் தனித்தனியே உள்ள மக்களின் ஒழுக்கநெறி. | | | | |

# இலக்கணம் இனிதே!
# புறப்பொருள்

| புறத்திணை | திணை விளக்கம் |
|---|---|
| வெட்சி | ஆநிரைகளைக் கவர்ந்துவர வெட்சிப் பூவினைச் சூடிக்கொண்டு செல்வது. |
| கரந்தை | கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளை மீட்கச்செல்லும் போது கரந்தை பூவினை சூடிச் செல்வது. |
| வஞ்சி | மண்ணாசை கொண்டு பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது. |
| காஞ்சி | தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு, காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிடுவது. |
| நொச்சி | கோட்டையைக் காக்க வேண்டி உள்ளிருந்தே முற்றுகையிட்ட பகையரசனோடு நொச்சிப்பூவைச் சூடிப் போரிடுவது. |
| உழிஞை | மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்ற உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் அதனைச் சுற்றி வளைப்பது. |
| தும்பை | பகைவேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்ட, தம் வீரர்களுடன் தும்பைப் பூவைச் சூடி போரிடுவது. |
| பாடாண் | பாடுவதற்குத் தகுதியுடைய ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது. |
| பொதுவியல் | வெட்சி முதல் பாடாண் வரை உள்ள புறத்திணைகளில் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது. |

# நம் வெற்றி நமக்கு எட்டும் தொலைவில் தான்!

*வாழ்த்துகளுடன்*
*அன்பின் நன்றியும்*
*த. ரேவதி*